LAW & SOCIETY TRUST

November 12th 2020

To whom it may concern,

The Law and Society Trust, writes with regard to the report titled ‘Stories of roots and return: Thirty years since the expulsion of the Northern Muslims’.

This report was initiated by the Law and Society Trust as a pillar of its work on reconciliation. Amalini De Sayrah and Natasha Van-hoff of the Law and Society Trust, in consultation with Ms. Shreen Saroor and other activists, developed the report. As such, the Law and Society Trust takes responsibility for this report, from its planning to publication stages.

The methodology for developing the report included interviews with many Northern Muslims who have returned to Jaffna and Mullativu, as well as those still living in Puttalam and Negombo.

The information on each of the locations covered was obtained through conversation with several women from each area, and thus cannot be attributed to one single individual. This has been noted in the Introduction of the report as well (Page 4 in the English version, and Page 5 in both the Sinhala and Tamil versions).

The authors are also aware that the views are not representative of the entire community of Northern Muslims who are living in displacement. While it captures significant stories, it cannot be considered as the entire community’s opinion and experience. Nevertheless, this is the task of memorialisation.

The Puttalam section, similarly was compiled based on the experiences of many women. While it is not representative of the entire community of Northern Muslims living in Puttalam, the selected stories are significant.
We reiterate that the Puttalam section is not solely the voice of Mrs. Juwairiya Mohideen. Her contribution formed only a part of the report. Her photograph was used as she was a prominent figure in the area. It was not intended to attribute authorship to her. Additionally, the Muslim Women’s Development Trust played no part in organising, writing or publishing this report.

We hope these responses address some of the concerns and allegations that have been levelled against Mrs. Mohideen regarding her comments in this report.

We urge anyone with questions regarding the contents and context of this report to please contact the Law and Society Trust directly at the following email addresses:

info@lstlanka.org
communications@lstlanka.org

Sakuntala Kadirgamar
Executive Director
Law and Society Trust

---

அன்புடையீர்,

சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை பொறுப்பின் கூட்டணி 'வேர்களினதும் மீளத் திரும்பலினதும் கதைகள்: வடக்கு முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டதில் இருந்து 30 வருடங்கள்' என்ற அறிக்கையை பற்றி பின்வருமாறு கூறுகிறது.

இந்த அறிக்கையானது சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை பொறுப்பின் கூட்டணியினால் நல்லிணக்கம் சார்ந்த வேலைத்திட்டத்தின் ஒரு தூணாக முன்னெடுக்கப்பட்டது. இந்த அறிக்கையானது சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை பொறுப்பின் கூட்டணியின் அமலினி தி செய்ரா மற்றும் நடாஷா வான்ஹாப் ஆகியோர் ஷிரீன் சரூர் மற்றும் ஏனைய செயற்பாட்டாளர்களின் ஆலோசனையுடன் எழுதப்பட்டது. ஆகவே இந்த அறிக்கையின் ஆரம்ப திட்டமிடல் செயற்பாடுகளில் இருந்து இறுதி வெளியீடு வரைக்கும் அறிக்கை தொடர்பான அனைத்திற்கும் சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை பொறுப்பின் கூட்டணியே பொறுப்பாகும் என்பதனை கூறிக்கொள்கின்றோம்.

இந்த அறிக்கையை எழுதும் போது, யாழ்ப்பாணம் மற்றும் முல்லைதீவிற்கு மீள்திரும்பிய முஸ்லிம்களினதும் புத்தளம் மற்றும் நீர்கொழும்பில் வாழ்ந்து வரும் வடக்கு முஸ்லிம்களினதும் நேர்காணல்கள் உள்ளடக்கப்பட்டன.

இந்த அறிக்கையில் உள்ளடங்கியுள்ள தகவல்கள் ஒவ்வொரு பிரதேசத்திலும் பல பெண்களுடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடல்களின் மூலம் பெறப்பட்டதால் இவ்வறிக்கையின் உள்ளடக்கங்கள் ஒரு நபரின் கருத்துக்கள் என்று கொள்ளமுடியாது. இவ்விடயம் அறிக்கையின் முன்னுரையிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அறிக்கையின் ஆங்கில மொழியாக்கத்தில் பக்கம் நான்கையும் சிங்களம் மற்றும் தமிழ் மொழியாக்கங்களில் பக்கம் ஐந்தையும் பார்க்கவும்)

அறிக்கையில் கூறப்பட்டிருக்கும் கருத்துக்கள் இடம்பெயர்ந்து வாழ்ந்து வரும் அனைத்து வடக்கு முஸ்லிம் சமூகத்தினதும் கருத்துக்களை பிரதிபலிக்காது என்பதனை அறிக்கை ஆசிரியர்கள் நன்கு அறிவார்கள். இந்த அறிக்கையானது சில காத்திரமான கதைகளை உள்ளடக்கியிருந்தாலும் இது முழு சமூகத்தினதும் கருத்தோ அல்லது அனுபவமோ என்று கொள்ள முடியாது. இருந்தபோதிலும் நினைவுகூர்தல் என்ற விடயத்தில் இந்த அறிக்கையும் ஒரு பங்கை ஆற்றுகிறது.

இதே போன்று இவ்வறிக்கையில் புத்தளத்தை பற்றிய பாகமும் பல பெண்களின் அனுபவங்களை உள்ளடிக்கியே எழுதப்பட்டது. இது புத்தளம் வாழ் அனைத்து வடக்கு முஸ்லிம்களையும் பிரதிபலித்து நிற்காது என்றாலும் அறிக்கையில் கூறப்பட்ட கதைகள் குறிப்பிடத்தக்க முக்கியம் வாய்ந்தவை.

அறிக்கையில் புத்தளத்தை பற்றிய குறிப்பில் திருமதி ஜுவேரியா மொஹெய்தீனின் கருத்துக்கள் மாத்திரம் உள்ளடக்கப்பட்டதாக கொள்ளமுடியாது என்பதனை நாம் வலியுறுத்துகின்றோம். அவரது பங்களிப்பு அறிக்கையின் ஒரு பாகம் மாத்திரமே. புத்தளத்தில் சமூக முக்கியம் வாய்ந்த ஒருவர் என்பதனால் அவரது புகைப்படமும் அறிக்கையில் பாவிக்கப்பட்டது. இதனால் அறிக்கையின் ஆசிரியத்துவம் அவருக்கே கொடுக்கப்பட்டுள்ளது என்று கொள்ளமுடியாது. மேலும் முஸ்லிம் பெண்கள் அபிவிருத்தி நம்பிக்கை பொறுப்பு இந்த அறிக்கையை ஒழுங்கு செய்வதற்கோ, எழுதுவதற்கோ, பிரசுரிப்பதற்கோ எவ்விதத்திலும் பங்காற்றவில்லை.

மேற்கூறப்பட்டுள்ள விடயங்களானது திருமதி ஜுவேரியா மொஹெய்தீன் இந்த அறிக்கைக்கு கொடுத்த கருத்துக்கள் தொடர்பாக அவருக்கு எதிராக எழுந்துவரும்

கருத்துக்களுக்கும் குற்றச்சாட்டுக்களுக்கும் பதிலளிக்கும் முகமாக அமையும் என நம்புகிறோம்.

இந்த அறிக்கை தொடர்பாகவோ அதன் உள்ளடக்கங்கள் தொடர்பாகவோ கேள்விகள் இருப்பின் சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை பொறுப்பின் கூட்டணிக்கு நேரடியாக கீழ் காணும் மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொள்ளுங்கள்.

info@lstlanka.org
communications@lstlanka.org

சகுந்தலா கதிர்காமர்
நிர்வாக இயக்குனர்
சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை பொறுப்பின் கூட்டணி